தமிழ்ப் பல்கலைக் கழகச்
# செய்தி மலர்

மலர்.7 திருவள்ளுவர் ஆண்டு ௨0௧௯ - வைகாசி 3௨ - 14-6-88 இதழ்.3

## தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் இணைவேந்தர்

மேதகு தமிழக ஆளுநரின் மாண்புமிகு ஆலோசகரும் தமிழ்ப் பல்கலைக்கழக இணைவேந்தருமான டாக்டர் ஏ.பத்மநாபன் 8-6-'88 தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு வருகை தந்ததையொட்டி அவருக்குத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் புதிய வளாகத்திலுள்ள மொழிப்புல அரங்கில் சிறப்பானதொரு வரவேற்பு அளிக்கப்பட்டது. அவ்வரவேற்புக் கூட்டத்திற்குத் தமிழ் வளர்ச்சிப்பண்பாட்டுத் துறை கூடுதல் செயலர் திரு எஸ்.டி.காசிராஜன், பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தா முனைவர் எஸ். முத்துக்குமரன் ஆகியோர் வந்து கலந்துகொண்டு சிறப்பித்தனர்.




தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ச.அகத்தியலிங்கம் இணைவேந்தரையும் உடன் வந்திருந்தோரையும் வரவேற்றுப் பேசுகையில், "இந்த நாள் தமிழ்ப் பல்கலைக்கழக வரலாற்றில் சிறந்த பொன்னாள். நம்முடைய இணைவேந்தர் சிறந்த ஆட்சியர் மட்டுமல்லர்; சிறந்த கவிஞருமாவார். இரண்டாயிரம் ஆண்டுக்காலமாகத் தொடர்ந்துவரும் இலக்கியப் பாரம்பரியத்திற்கு மெருகூட்டும் வகையில் கவிதைகள் பலவற்றைப் படைத்து உள்ளார். அவர்களுடைய நூல்களைத் துருவித் துருவிப் படித்து மகிழ்ந்தேன். கவிதா மண்டலத்தில் அவருக்குச் சிறப்பானதோர் இடமுண்டு. எடுத்துக்காட்டாககடவுளைக் குறித்துப்பேசுகிற அவருடைய கவிதைபற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். அந்த ஆறு அல்லது எழு வரிக் கவிதையில் நாம் அவருடைய நெஞ்சத்தைக் காணமுடிகிறது. 'களங்கத்திலே வருகின்ற மக்களால் என்னைக் கலங்க வைக்க முடியாது. என்னை நல்ல மனிதனாக, வீரனாகப் படைத்திருக்கிறார் கடவுள்' -என்று அக் கவிதையில் கூறியுள்ளார். சங்க காலத்தில் வாழ்ந்த அரசப் புலவர்களைப்போல, அமைச்சராக இருந்த சேக்கிழார் கவிஞராக விளங்கியது போல, சேர அரசிளங்குமரன் இளங்கோ கவிஞனாக விளங்கியதுபோல நம்முடைய இணைவேந்தரும் இணையற்ற ஒரு கவிஞராக விளங்குகிறார்" - எனக் குறிப்பிட்டார்.

அடுத்து, நமது மாண்புமிகு துணைவேந்தர் அவர்கள் பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் எஸ்.முத்துக்குமரன் அவர்களையும், கூடுதல் செயலர் திரு காசிராஜன் அவர்களையும், கூட்டத்திற்கு வந்திருந்தோரையும் வரவேற்றார்.

அடுத்துப் பேசிய திரு காசிராஜன்அவர்கள் 'மானுடம் வென்றதம்மா' – என்ற கம்பன் மொழியைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் குறிப்பிட்டது மிகப் பொருத்தமானது என்று கூறியதோடு மாண்புமிகு ஆலோசகர் பணிபுரிந்துவரும் சிறப்பை விரித்துரைத்தார். ஆலோசகரின் கவிதைகள் இரண்டினைக் குறிப்பிட்டு, அதன்சிறப்புக்களைச் சுட்டியதோடு தமிழக அரசு பரிசளிப்பதற்காகப் பெருமளவில் நூல்களை ஆசிரியர்கள் அனுப்பவில்லை என வருந்திக் கூறினார்.

அடுத்துப் பேசிய பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் எஸ்.முத்துக்குமரன் அவர்கள் தமிழ்ப் பல்கலைக்கழகத்தாரால் வெளியிடப்படும் நூல்கள் நல்ல தமிழ் நடையிலே உள்ளதால் சிறந்த மொழி பெயர்ப்புகளையும் தமிழ்ப் பல்கலைக்கழகமே வெளியிடுவது பொருத்தமாகும் என்றும் குறிப்பிட்டார்.

இறுதியாக, இணைவேந்தர் டாக்டர் வெ.பத்மநாபன் அவர்கள் பேசுகையில் "தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்குஒரு தனிச் சிறப்புண்டு. இப் பல்கலைக்கழகம் தமிழ்மக்களுக்கு நல்ல தமிழை எடுத்துச் சொல்ல வேண்டும். தொன்று தொட்டு, சிறப்பான மொழியாக இருக்கின்ற தமிழ் மொழி, தமிழ்நாட்டின் பண்பாடு, கலை ஆகியவை நிலைத்து நிற்கவேண்டும் என்ற நோக்கத்தில் நீங்கள் எல்லோரும் சேர்ந்து கூறியதை ஏற்றுக்கொண்டு தமிழக அரசு இப் பல்கலைக்கழகத்தை நிறுவியது. இங்கே மற்றவர்கள் பேசும்போது தமிழின் இனிமையை நான் சுவைத்தேன். நீங்கள்எல்லோரும் எழுத்தாளர்கள். இரண்டாயிரம் ஆண்டுகளாக ஓர் இலக்கியம் சிறப்பாக இருக்கிறது என்றால் அது தமிழ் இலக்கியம்தான். எழுத்தாளர்களில் இருவகை உண்டு. ஒருவகையினர் எப்படி எழுதினால் விற்பனையாகும் என்று பார்த்து எழுதுவார்கள். மற்றொரு வகையினர் தங்களுடைய கருத்துக்களைச் சமுதாயத்தின் நன்மைக்காகவும், மேம்பாட்டிற்காகவும் எழுதுவார்கள். இரண்டாவது பிரிவினருக்கு இன்று பெருஞ்சிறப்பு இல்லாமலிருந்தாலும் அவர்களுடைய எழுத்துக்கள் என்றும் நிலைத்து நிற்கும்.

நம் ஆளுநர் அவர்கள் நல்ல நூல்கள் எழுதுவதை ஊக்குவிப்பதில் ஆர்வமாக இருக்கிறார்கள். தமிழுக்கு, தமிழ்ப் பண்பாட்டிற்கு, நாம் என்னென்ன செய்யலாம் என ஆர்வமாக உள்ளார்கள். எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள் ஆகியோருக்கு நல்ல வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். ஒருவன் வாழ்வில் வறுமை இருக்கலாம். ஆனால் அவன் கருத்திலே வறுமை இல்லை. ஆய்வு ஒரு கடினமான செயல். தமிழ்ப் பல்கலைக்கழகத்தினரான நீங்கள் ஆய்வு செய்யாவிடில் வேறு யார் ஆய்வு செய்ய முடியும்? தமிழ்ப் பல்கலைக்கழகம் உங்கள் உழைப்பினால், உங்கள் ஆய்வுத் திறத்தினால் சிறப்படைய வேண்டும். இன்னும் 3000 ஆண்டுகளுக்குப்பின் வருபவர்கள் இதுபற்றிப் பேச வேண்டும்" என்று கூறினார்.

இணைவேந்தரவர்கள் தமிழ்நாட்டுச் சித்தர் பாடல்களின் சிறப்பைப்பற்றிக் குறிப்பிட்டு, தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குத் தமிழக அரசு உறுதுணையாக இருந்து அதனுடைய வளர்ச்சிக்குப் பாடுபடும் என்று உறுதி கூறி, தம் உரையை முடித்தார்.

தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பெ. சின்னையன் இணைவேந்தருடைய கவிதைச் சிறப்பைப்பற்றிக் கூறி எல்லோருக்கும் நன்றி கூறினார்.

## சுவடித்துறையின் கோடைப் பயிற்சிப் பள்ளி

பல்கலைக்கழக நல்கைக் குழுவின் நிதியுதவியுடன் தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச் சுவடித்துறை, ஆய்வாளர்கள் மற்றும் பள்ளித் தமிழாசிரியர்களுக்கான சுவடியியல் கோடைப் பயிற்சி வகுப்பு ஒன்றை 9-5-'88 முதல் 30-5-'88 வரை தமிழ்ப் பல்கலைக்கழக அரண்மனை வளாகத்தில் நடத்தியது.

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் மாவட்டத்திற்கு ஒருவர் என்ற முறையில் ஆடவரும் மகளிருமாக 40 பேர் இவ்வகுப்பில் பயிற்சி பெற்றனர்.

இப்பயிற்சி வகுப்பின் தொடக்கவிழா 9-5-'88 காலை 10 மணியளவில் தமிழ்ப் பல்கலைக்கழக அரண்மனை வளாகத்தில் நடைபெற்றது. தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் ச.அகத்தியலிங்கம் தலைமையேற்று, தொடக்கவிழாச் சிறப்புரையாற்றினார். தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பெ.சின்னையன் மையக் கருத்துரை வழங்கினார்.

சுவடி தேடுதல், பட்டியலிடல், படித்தல், பெயர்த்தெழுதல், பதிப்பு அறிமுகம் என்ற பாடப் பிரிவுகளில் வகுப்புகள் நடத்தப்பட்டன. காலையில் பாடவகுப்புகளும் மாலையில் செய்முறை வகுப்புகளும் நிகழ்ந்தன. ஓலைச் சுவடித்துறைத் தலைவர் த.கோ.பரமசிவம், திருவாளர்கள் மாதவன், கிருஷ்ணமூர்த்தி, நாகராசன், இலட்சுமணன், சொக்கலிங்கம், கண்ணையன் ஆகியோர்பயிற்றுநர்களாக இருந்தனர். பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளில் பணிபுரியும் திரு கா.செ.செல்லமுத்து, திரு செ. இரெ.செயச்சந்திரன், திரு சுப்பராயலு, திரு பெ.சின்னையன், திரு இராசேந்திரன், திரு சுப்பிரமணியன், திரு கோ.தெய்வநாயகம், திரு பவுன்துரை, திரு பத்மநாபன் ஆகியோர் உள்ளூர்ப் பயிற்றுநர்களாகப் பணி புரிந்தனர். வெளியூர்களிலிருந்து திரு மு.சண்முகம்பிள்ளை, திரு மு. கோ.இராமன், திரு மூக்கரெட்டி, திரு இளங்குமரன், திரு டி.வி.கோபாலையர் ஆகியோர் வந்து பயிற்சி அளித்தனர்.

பயிற்சியாளர்கள் அனைவரும் சுவடிக்கலையைப்பற்றி விளக்கமாக அறிந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கத்தில் சென்னை சென்று இரு நாள்கள் உ.வே. சா. நூலகம் போன்ற சுவடி நூலகங்களைப் பார்வையிட்டனர்.

அடுத்து, தஞ்சைக்கு அருகிலுள்ள வடுவூர் என்னும் ஊரைச் சுவடி தேடுதலுக்காகத் தேர்ந்தெடுத்து, பயிற்சியாளர்கள் அவ்வூருக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் ஐந்து குழுக்களாகப் பிரிந்து வீடு வீடாகச் சென்று சுவடி கேட்டதில் பல சுவடிகள் கிடைத்தன. செய்முறைப் பயிற்சியில் பயிற்சியாளர்களுக்குச் சுவடிகளைக் கையாளவும், பாதுகாக்கவும், படியெடுக்கவும் விளக்கம்அளிக்கப் பட்டது.

சுவடியியல் கோடைப்பள்ளியின் நிறைவு விழா 30, 31-5-'88 ஆகிய இருநாள்களில் நடைபெற்றது. முதல் நாள் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பெ. சின்னையன் அவர்கள் தலைமையில் கலை நிகழ்ச்சிகள்நடைபெற்றன. தமிழிசை வேந்தர், கலைமாமணி, திருமுறைக் கலாநிதி காஞ்சிபுரம் ஆ. விநாயக முதலியார் தமிழிசை, பயிற்சியாளர்கள் வழங்கிய தமிழிசை, நாடோடிப்பாடல்கள், நடனம், படகா நடனம், நாடகம் ஆகியவை நடைபெற்றன. புலவர் ப. வெ. நாகராசன் தலைமையில் 'தமிழ்க் கல்வி வளர' என்னும் தலைப்பில் கவியரங்கம் ஒன்றும் நடத்தப் பெற்றது.

31-5-'88 காலை நடந்த சான்றிதழ் வழங்கும் நிறைவு விழாவிற்குத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கம் தலைமையேற்றுச் சிறப்பித்தார். துணைவேந்தரவர்கள் பேசுகையில்,

"தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சுவடித்துறை ஒரு சிறந்த துறை. வேறு எந்தப்பல்கலைக்கழகத்திலும் சுவடிக்கெனத் தனித்துறை இல்லை. தமிழ்ப் பல்கலைக்கழகத்தில்தான் இதற்கெனத் தனித் துறை உள்ளது. நாடெங்கும் பரவிக் கிடக்கும்சுவடிகளைச் சேர்த்து அவற்றில் அடங்கிக் கிடக்கும் செய்திகளை வெளியிடுவது இத்துறையின் முக்கியப் பணியாகும். இப்பயிற்சிப் பள்ளியில் ஆய்வு மாணவர் மட்டுமன்றி, பள்ளி ஆசிரியர்களும் கலந்து கொண்டுள்ளனர். இதன் நோக்கம் தொலை தூரங்களிலுள்ள கிராமப்பகுதியில் வாழும் மக்களும் சுவடி பற்றிய செய்திகளை உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதுதான். பயிற்சியாளர்கள் இப்பயிற்சி முடிந்து தங்கள் இல்லங்களுக்குச் சென்ற பின்னரும் இத்துறையோடு தொடர்ந்து தொடர்புகொண்டு நாடு முழுவதிலும் சிதறிக் கிடக்கும் ஓலைச்சுவடிகளைச் சேகரிப்பதிலும் பாதுகாப்பதிலும் அவற்றில் காணப்படும்அரிய செய்திகளை வெளியிடுவதிலும் ஈடுபட வேண்டும்"

– எனக் கேட்டுக் கொண்டார்.

திருமதி பொன்னம்மாள் அகத்தியலிங்கம் பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

இவ்விழாவிற்கு வந்திருந்தோரைத் துறைத் தலைவர் முனைவர் த. கோ. பரமசிவம் வரவேற்றார். முனைவர் ச. கிருட்டிணமூர்த்தி அறிக்கை படித்தார். பயிற்சியாளர் தலைவர் திரு து. முருகையா நன்றி கூற விழா இனிது முடிந்தது.

## நாடகத்துறையின் கோடைப் பயிற்சிப் பட்டறை

பல்கலைக்கழக நல்கைக் குழுவின் நிதியுதவியுடன்கூடிய கல்லூரி ஆசிரியர்களுக்கான கோடைக்கால நாடகப் பயிற்சிப் பட்டறை, தமிழ்ப் பல்கலைக்ழக நாடகத்துறையின் சார்பில் 16-5-'88 முதல் 12-6-'88 வரை நடைபெற்றது.

இக் கருத்தரங்கின் தொடக்கவிழா 16-5-'88 காலை 10.30 மணிக்குத் தமிழ்ப் பல்கலைக்கழகப் புதிய வளாகத்தில் நடைபெற்றது.

தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கம் அவர்கள் பயிற்சிப்பட்டறைத் துவக்க விழாவிற்குத் தலைமையேற்று உரையாற்றினார். தமிழ்ப் புதின, நாடக ஆசிரியர் முனைவர் இந்திரா பார்த்தசாரதி விழாவைத் துவக்கி வைத்தார். நாடகக் கலை ஆசிரியர் பேரா. ஜி. சங்கரப்பிள்ளை தொடக்க விழா மையக் கருத்துரை வழங்கினார்.

இந் நாடகப் பயிற்சிப் பட்டறையின் நிறைவு விழா 10-6-'88 மாலை 6 மணிக்குத் தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வளாகத்திலுள்ள ஆடல் வல்லான் கலையரங்கில் நடைபெற்றது. தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கம் நிறைவுவிழாவிற்குத் தலைமையேற்றார். நாடக ஒளியமைப்புக் கலைவல்லுநர் திரு இராமமூர்த்தி நிறைவு விழா உரையாற்றினார்.

## சித்தர்களின் தத்துவம் - கருத்தரங்கு

தமிழ்ப் பல்கலைக்கழகக் காஞ்சி தத்துவமையத்தின் சார்பில் 'சித்தர்களின் தத்துவம்' என்னும் தலைப்பில் கருத்தரங்கு 23-5-'88 அன்று பிற்பகல் 2.30 மணியில் தத்துவ மைய வளாகத்தில் நடைபெற்றது.

கருத்தரங்கிற்கு இரா. கோலப்பப்பிள்ளை, இயக்குநர் (பொறுப்பு), தலைமை வகித்தார். திருவீதிபள்ளம் ஓய்வு பெற்ற வட்டாட்சியர் திரு எம். சுவாமிவேலு சித்தர்களின் தத்துவம் என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

சித்தர்களின் பாடல்கள், அவரது தத்துவங்கள், அவர்கள் தயாரித்த மருந்துகள், குளிகைகள் அவற்றின் பயன்கள்பற்றித் தம் சிறப்புரையில் திரு எம். சுவாமிவேலு விரிவாக எடுத்துக்கூறினார். ஓய்வுபெற்ற தமிழாசிரியர் திரு நாராயணவேலுப்பிள்ளை கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

முனைவர் செ. அரங்கசாமி, முதுநிலை ஆய்வாளர் நன்றிகூற கருத்தரங்கு இனிது முடிந்தது.

தமிழ்ப் பல்கலைக் கழகச்

# செய்தி மலர்


திங்களிதழ்
பதிவெண் 15033/88X1

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் - 613 001.
தமிழ்நாடு - இந்தியா.

இ.அ.அ. மட்டும்.

37) நிருவாக அதிகாரி
தஞ்சை மகாராசா சரபோசி
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்

## அரிய கையெழுத்துச் சுவடித்துறை – பணிப் பட்டறை



தமிழ்ப் பல்கலைக்கழக வரலாறு மற்றும் அரிய கையெழுத்துச் சுவடித்துறை, பல்கலைக்கழக நல்கைக் குழுவின் நிதியுதவியுடன் 28-5-'88 முதல் 16-6-'88 வரை கல்லூரி ஆசிரியர்களுக்கான 'ஆராய்ச்சி நெறிமுறைகளும் காகிதச் சுவடிகளை மதிப்பிடுதலில் எழும் சிக்கல்களும்' என்னும் தலைப்பில் கோடைக் காலப் பயிற்சிப் பட்டறையை நடத்தியது. இதன் தொடக்க விழா 28-5-'88 காலை 10.30 மணிக்குத் தமிழ்ப் பல்கலைக்கழக மொழிப் புலக் கருத்தரங்க அறையில் நடைபெற்றது. தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கம் தலைமையேற்று, தலைமையுரையாற்றினார். அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேரா. எஸ். வி. சிட்டிபாபு தொடக்கவுரை நிகழ்த்தினார்.

## பயன்பாட்டு மொழியியல் கோடைப்பள்ளி

தமிழ்ப் பல்கலைக்கழக மொழியியல்துறை, பல்கலைக் கழக நல்கைக் குழுவின் நிதியுதவியுடன் "கோடைக்காலப் பயன்பாட்டு மொழியியல் பள்ளி" என்னும் தலைப்பில் பயிற்சி வகுப்பு ஒன்றை 20-5-'88 முதல் நடத்தியது. இதன் தொடக்கவிழா 20-5-'88 காலை 10.30 மணிக்குத் தமிழ்ப்பல்கலைக்கழக மொழிப்புலக்கட்டடத்தில் நடைபெற்றது. தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கம் தலைமையில் தொடக்கவிழா நடைபெற்றது. பேராசிரியர் மு. சண்முகம்பிள்ளையவர்கள் பள்ளியைத் தொடங்கிவைத்துத் தொடக்கவுரையாற்றினார்.

## வருந்துகிறோம்

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் இலக்கியத் துறைப் பேராசிரியரும், மொழிப்புலத் தலைவரும்ஆட்சிக் குழு உறுப்பினருமான பேராசிரியர் க. வெள்ளைவாரணனார் அவர்கள் 13-6-'88 திங்கட்கிழமையன்று மறைந்ததையொட்டி, தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் சார்பில் மலர் வளையம் வைத்து வணக்கம் செலுத்தப்பட்டது. துணைவேந்தரவர்கள் சார்பிலும், இணைவேந்தரவர்கள் சார்பிலும், தமிழ்ப் பண்பாட்டுத்துறைச் செயலாளர்சார்பிலும் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. பேராசிரியரின் குடும்பத்தினருக்குத் தமிழ்ப் பல்கலைக்கழகம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

பதிப்பாசிரியர்: இயக்குநர், பதிப்புத்துறை
அச்சு: தமிழ்ப் பல்கலைக் கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர் - 613 001